# பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## கோரிக்கை எண் – 35

## 2015 - 2016

**எஸ். பி. வேலுமணி,**
நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி,
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2015

## பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

## 2015–2016 – ஆம் ஆண்டிற்கான

## கொள்கை விளக்கக் குறிப்பு

தமிழ்நாடு அரசு, மனிதவள மேம்பாட்டின் அவசியத்தை உணர்ந்து, திரு. டி.ஏ. வர்கீஸ், ஐ.சி.எஸ்., அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட நிருவாகச் சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் அதற்காக ஒரு தனித் துறையை பொதுத்துறையிலிருந்து 1976–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் ஆறாம் நாள் உருவாக்கி, அதற்கு பொருந்தும் வகையில் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை என பெயர் வழங்கியுள்ளது. இத்துறை பின்வரும் இரண்டு அலகுகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது:–

(i) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை;

(ii) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை.

இத்துறையின் பணிகள் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன:–

அ) அறிவுரை வழங்கும் பணிகள்

ஆ) சட்டரீதியான பணிகள்

இ) நிருவாகப் பணிகள்

அரசுத் துறையில் மனிதவள மேம்பாட்டு பணிகளை கவனிப்பதில் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை முக்கிய பங்கு ஆற்றுகிறது.

பணியாளர் மேலாண்மை என்பது மாற்றத்திற்குட்பட்டதாக இருப்பதால், அதை நிகழ்கால தேவைகளுக்கேற்ப தரம் உயர்த்துவது அவசியம். இத்துறை பணியாளர்கள் எனும் முக்கிய மூலாதாரத்தைச் செறிவாக்கிட பணியாளரை நியமித்தல், பயிற்சியளித்தல், ஊக்குவித்தல், பதவி உயர்வு வழங்குதல், தலைமைச் செயலகம் மற்றும் இதர துறைகளிலுள்ள பணியாளர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகளைக் கவனித்தல் போன்ற பணிகளை கவனித்து வருகின்றது.

இவற்றோடு, தலைமைச் செயலக அலுவல்கள் குறித்த நடவடிக்கைகள், அரசுப் பணியாளர் நலன் ஆகியவற்றில் இத்துறை முக்கியப் பங்காற்றி வருகிறது.

இத்துறை ஆற்றிவரும் பல்வேறு பணிகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன:–

**1. (அ) அறிவுரை வழங்கும் பணிகள்**

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தல்கள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பின்வரும் இனங்களில் தலைமைச் செயலக துறைகளுக்கு அறிவுரை வழங்கும் ஒரு துறையாக விளங்குகிறது:–

- தமிழ்நாடு மாநிலப் பணிகள், தலைமைச் செயலகப் பணியின் கீழ்வரும் பல்வேறு பணியிடங்களுக்கான காலிப்பணியிட மதிப்பீடு தயார் செய்தல், அப்பணியிடங்களுக்கான தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் தயாரித்தல்.
- அரசுப் பணியாளர்களின் பணியை வரன்முறைப்படுத்துதல், தகுதிகாண் பருவத்தினை முடித்தல் தொடர்பாக சிறப்பு – பொது ஆகிய விதிகளைத் தளர்த்துவது குறித்த கருத்துருக்களை ஆய்வு செய்தல்.

- அடிப்படை விதிகள், விதிக்கூறுகள் ஆகியவற்றிற்கு தெளிவுரைகள் வழங்குதல்.
- முதுநிலையைத் திருத்துவது குறித்த கருத்துருக்களை விதிக்கூறுகளின்படி ஆய்வு செய்தல்.
- வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிக்குச் சமமான கல்வித் தகுதியை அங்கீகரித்தல் குறித்த கருத்துருக்களை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ‘இணைக் கல்வி நிர்ணயப் பரிசீலிப்புக் குழுவின்’ பரிந்துரையின்பேரில் ஆணை வெளியிடுதல் போன்றவையாகும்.

**(ஆ) சட்டரீதியான பணிகள்**

அரசுப் பணியாளர்களின் பணிகள் தொடர்பான பின்வரும் சட்டரீதியான பணி விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியவை இத்துறையால் நிருவகிக்கப்படுகின்றன:—

* மாநில அரசின் பல்வேறு துறைகளில் பணிபுரியும் அனைத்து வகை அரசுப் பணியாளர்களின் பணிவிதிகள் (அகில இந்தியப் பணிகள்

நீங்கலாக):

(i) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான விதிகள் (பகுதி–I மற்றும் II).

(ii) தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள், 1973.

(iii) தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள்.

(iv) தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள்.

(v) தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955.

(vi) தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதிகள்.

(vii) தமிழ்நாடு அடிப்படைப் பணி சிறப்பு விதிகள்.

(viii) தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி சிறப்பு விதிகள் – இனம் XXII.

* தமிழ்நாடு தலைமைச் செயலகத்திற்கான குறிப்பிட்ட பணி விதிகள்:–

  (i) தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணி சிறப்பு விதிகள்.

  (ii) தமிழ்நாடு பொதுப்பணி சிறப்பு விதிகள் – இனம் XII மற்றும் XII A.

  (iii) தமிழ்நாடு தலைமைச் செயலக அலுவலகக் கையேடு.

* பிற நிறுவனங்கள் தொடர்பான விதிகள்:–

  (i) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள், 1954.

  (ii) தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணம்) விதிகள், 2005.

* *அரசு அலுவல்கள்*

இத்துறையினால் தலைமைச் செயலக அளவில், தமிழ்நாடு அரசின் அலுவல்கள் குறித்த பின்வரும் விதிகளும் நிருவகிக்கப்படுகின்றன:–

(i) தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள், தலைமைச் செயலக அறிவுறுத்தல்கள்;

(ii) அவ்வப்போது வெளியிடப்படும் மாண்புமிகு முதலமைச்சரின் நிலை ஆணைகள்.

**(இ) நிருவாகப் பணிகள்**

இத்துறையினால் பின்வரும் நிருவாகப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன:–

(i) தலைமைச் செயலகத்தில் ஓர் அலகு முறையின் (One Unit System) கீழ் வரும் அரசு சார்புச் செயலாளர்களின் பணிநிலை வரையுள்ள அனைத்துப் பணியாளர்களின் பணி அமைப்பு.

(ii) அனைத்துப் பணியாளர் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளித்தல் மற்றும் தமிழ்நாடு குடிமைப் பணிகள் கூட்டு மன்றக் கூட்டங்களை நடத்துதல்.

(iii) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு தகவல்

ஆணையம் ஆகியவற்றின் பணியாளர் தொடர்பான நிருவாகப் பணிகள்.

**(ஈ) இதரப் பணிகள்**

அ) மாநில நிருவாகச் சீர்திருத்தக் குழு மற்றும் மைய அரசு நிருவாகச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

ஆ) பயிற்சியளித்தல்:–

(i) பவானிசாகரிலுள்ள அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் களப்பணி அளவிலான பணியாளர்களுக்குரிய பயிற்சியும், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மூலமாக சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.

(ii) முதுநிலை / உயர்நிலை அளவிலான அலுவலர்களுக்கு சென்னையிலுள்ள அண்ணா மேலாண்மை நிலையத்தில் பயிற்சிகள் அளித்தல்.

(iii) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் புதிதாக நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களுக்குத் தலைமைச் செயலகத்தின் அன்றாட செயல்பாடுகள் குறித்த சிறப்புப் பயிற்சி.

இத்துறையின் கட்டுப்பாட்டில் பின்வரும் இயக்குநரகங்கள், அரசமைப்பின்கீழ் செயல்படும் அமைப்புகள், அவை சம்பந்தமான நிருவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:—

(i) ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம்.

(ii) ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள்

(iii) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்.

(iv) தமிழ்நாடு தகவல் ஆணையம்.

(v) அண்ணா மேலாண்மை நிலையம்

(vi) பயிற்சித் துறைத் தலைவர் அலுவலகம்

(vii) ‘‘அ’’ மற்றும் ‘‘ஆ’’ பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி நிலையம்

(viii) அகில இந்திய குடிமைப்பணி தேர்வு பயிற்சி மையம், சென்னை

(ix) குடிமைப்பணிகள் பயிற்சி மையம், மதுரை மற்றும் கோயம்புத்தூர்

(x) தமிழ்நாடு அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்

*இ) அரசு பணியாளர் நலன்*

தமிழ்நாடு அரசு ஊழியர்களின் ஒட்டு மொத்த நலனுக்கு முக்கியத்துவம் கொடுப்பது ஒன்றையே இத்துறை பெரிதென கருதுகிறது. அரசு அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் பிரச்சினைகளை எதிர்கொள்வதில் இனிமையான, இணக்கமான சூழ்நிலை உருவாகும் என்ற நம்பிக்கையை உறுதி செய்கிறது.

அரசுப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு மற்றும் பணிவரன்முறை குறித்த அனைத்துக் குறைபாடுகளும் தகுதி அடிப்படையில் குறித்த காலத்தில் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

*(ஈ) மின் ஆளுகை*

மின் ஆளுகை என்பது அரசு செயல்படுத்தும் அனைத்து திட்டங்களும், நடவடிக்கைகளும், எளிதாகவும், திறமையாகவும், வெளிப்படையான தன்மையுடனும் மக்களுக்கு தகவல் தொழில் நுட்பத்தின் வாயிலாக செயல்படுத்தப்படும் முறை ஆகும். தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்துத் துறைகளிலும் நிருவகிக்கப்படும் விதிகள் மற்றும் சட்டங்கள் அரசு வலைதளம் "www.tn.gov.in " இல் வெளியிடப்பட்டு, வெளிப்படையான மற்றும் திறமையான ஆளுகைக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்துறையினால் 2007–ஆம் ஆண்டிலிருந்து வெளியிடப்பட்ட அரசு நிலை ஆணைகளும், இதர முக்கியத்துவம் வாய்ந்த அரசாணைகளும் மின்னணுத் தொகுப்பில் (Electronic Compendium) தலைமைச் செயலக குறும்பரப்பு வலை தளத்தில் "http://parserver1/ par/gos/default.htm" வெளியிடப்பட்டுள்ளன. மின்னணுக் கோப்பு கையாளும் முறையின் Electronic File Processing System (EFPS) கீழ்,

கணினி மயமாக்கப்பட்ட அஞ்சல் பகிர்வு முறை, தன் பதிவேடு பதிவு செய்தல் / கண்காணித்தல் ஆகியவை தலைமைச் செயலகத் துறைகளில் தேசிய தகவல் தொடர்பு மையத்தின் (NIC) மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இத்தகைய நடைமுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. பணியாளர் தகவல் முறையில் (Personnel Information System - PINFOSYS) தலைமைச் செயலக அனைத்து துறைகளின் அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோரது பணி தொடர்பான விவரங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

*(உ) தற்போது நடைமுறையிலுள்ள அரசின் பல்வேறுசேவைகளை எளிமைப்படுத்துதல்*

**மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள், 07.08.2014 அன்று கீழ்க்கண்ட அறிவிப்பினை சட்டப்பேரவையில் வெளியிட்டார்.**

''அரசுத் துறைகளின் வழியாக மக்களுக்கு ஆற்றும் சேவையை விரைவுப்படுத்தும் நோக்கோடு, பல்வேறு துறைகளின் கீழ்வரும் குறைந்தது 25 சேவைகளை கண்டறிந்து, சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்தாலோசித்து அவற்றை எளிமைப்படுத்தி முறைப்படுத்தவும், இந்நடவடிக்கையில் பொதுமக்களும் தங்களது மேலான கருத்துக்களை நல்கிட ஊக்குவிக்கலாம். மேற்கண்ட ஆலோசனைகள் பெறப்பட்டு, திருத்திய நடைமுறைகள் வகுக்கப்பட்ட பின்னர், அதற்கேற்ப அந்தந்த துறைகளில் உள்ள விதிகளில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். முன்மொழியப்பட்ட இந்த நடைமுறைகளை எளிமைப்படுத்தி முறைப்படுத்தும் நடவடிக்கையில், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையானது சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்தாலோசித்து பணி முழுவதும் முடிவடைந்து வெளியிடும் வரை முக்கிய பங்காற்றும்''.

மேற்கண்ட அறிவிப்பினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு அரசாணை நிலை எண் 101, பணியாளர்

மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஏ) துறை, நாள் 01.10.2014–இல் ஆணைகள் வெளியிடப்பட்டன.

மேற்கண்ட அரசாணையின்படி தினமணி, தினத்தந்தி, இந்தியன் எக்ஸ்பிரஸ், டெக்கான் கிரானிக்கல் ஆகிய நாளிதழ்களில் கீழ்க்கண்ட விளம்பரம் 13.01.2015 அன்று வெளியிடப்பட்டது.

தமிழ் நாடு அரசு பொது மக்களுக்கு பல்வேறு துறைகளின் மூலம் திறம்பட அளித்து வரும் சேவைகள், அரசின் மூலமாக எதிர்பார்க்கப்படும் உத்தரவுகள், உரிமங்கள் அனைத்தும் மக்களுக்கு எளிதாக / விரைவாக சென்றடைய வேண்டும் என்ற முனைப்புடன் பணியாற்ற தற்போதுள்ள நடைமுறைகளை எளிமைப்படுத்தி முறைப்படுத்த தமிழக அரசு உத்தேசித்துள்ளது. அதனை செயல்படுத்தும் விதத்தில், பொதுமக்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் அதன் தொடர்பான நிறுவனங்களிடமிருந்து ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. அவ்வாறு அளிக்கப்படும் ஆலோசனைகள், தீவிர பரிசீலனைக்குப்பின் சம்பந்தப்பட்ட அரசுத் துறைக்கு அனுப்பப்படும்.

அத்துறையானது திருத்திய நடைமுறைகளை வெளியிடுவது குறித்து ஆய்வு செய்து முடிவெடுத்த பின்னர் மேல்நடவடிக்கை எடுக்கப்படும். இது குறித்த ஆலோசனைகளை simplifyprocedureintn@tn.gov.in என்ற மின்னஞ்சலில் 500 வார்த்தைகளுக்கு மிகாமல் கீழ்க்காணும் தலைப்புகளில் (முடிந்த மட்டும் வரைபடம் மூலம்) சமர்ப்பிக்கவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அ) தேவைப்படும் சேவை (சான்றிதழ் வழங்குதல் / கட்டணம் செலுத்துதல் போன்றவை)

(ஆ) எத்துறை/அலுவலகத்தின் நடைமுறையைச் சார்ந்தது

(இ) தற்போதுள்ள நடைமுறை

(ஈ) தோராயமான தலைப்பு / நடைமுறையின் பெயர்

(உ) தேவைப்படும் மாற்றங்கள்

(ஊ) மாற்றத்திற்கான விளக்கம்

மேற்கண்ட விளம்பரமானது 04.02.2015 அன்று மீண்டும் அரசு செய்திக் குறிப்பாக வெளியிடப்பட்டது. இதுவரை சுமார் 381

ஆலோசனைகள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

*அ) அமைப்பும் பணிகளும்*

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தன்னாட்சி அமைப்புடன் தனது பணிகளைச் சுயமாகவும், நேர்மையாகவும், பாகுபாடின்றியும் செயல்படுத்தும் வகையில், இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 315(1)–இன் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இத்தேர்வாணையம், தலைவர் மற்றும் 14 (பதினான்கு) உறுப்பினர்களைக் கொண்டதாகும். இத்தேர்வாணையத்தின் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரின் பணிநிலைகள் 1954–ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளுக்கு உட்பட்டவையாகும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், இந்திய அரசியலமைப்புச் சட்டப்

பிரிவுக் கூறு **320–**இன்படி கீழ்க்கண்ட கடமைகள் மற்றும் அலுவலக பணிகளை மேற்கொள்கிறது:–

(i) பணியாளர்களைத் தெரிவு செய்தலே இதன் தலையாய பணியாகும்;

(ii) பணியாளர்களைத் தெரிவு செய்தல் பற்றிய விதிகளை இயற்றுவது, பணி நியமனம், பதவி உயர்வுகள் அளித்தல், ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாறுதல் முறையில் நியமனம் செய்தல் ஆகியவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள் மற்றும் அரசுப் பணியாளர்களின் ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்த அனைத்து நேர்வுகளிலும் அரசுக்கு ஆலோசனை வழங்குதல்;

(iii) அரசுப் பணியாளர்களுக்கான துறைத் தேர்வுகளை நடத்துதல்;

(iv) டேராடூன் இந்திய இராணுவக் கல்லூரி நுழைவுத் தேர்வுகளை ஆண்டிற்கு இருமுறை,

மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் சார்பாக நடத்துதல்.

*ஆ) தேர்வு முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பல்வேறு புதிய சீர்திருத்தங்கள்*

இத்தேர்வாணையம் தேர்வு முறைகளில் முழு வெளிப்படைத்தன்மையினை உறுதி செய்திடவும், பணிநியமனம் நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்திடவும் ஒவ்வொரு கட்டத்திலும் பல்வேறு புதிய சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. அவை பின்வருமாறு:—

i) தேர்வாணையம் ஒவ்வொரு ஆண்டும் போட்டித் தேர்வுக்கான நேரடி தேர்வுத்திட்ட ஆண்டு அட்டவணையை ஆண்டின் தொடக்கத்திலேயே வெளியிடும் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. இதன் மூலம் விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் தேர்வுகளுக்கு தங்களை முன்னதாக தயார் செய்து கொள்ளலாம்.

ii) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் அனைத்துத் தேர்வுகளுக்கும், பயன்பாட்டிற்கு எளிதாக உள்ளவாறு இணையதளம் வழியே

விண்ணப்பிக்கும் முறை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

iii) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தனது அடிப்படை விவரங்களை குறைந்த கட்டணத்தில் (ரூ.50/–) கையொப்பம் (ம) புகைப்படத்துடன் நிரந்தரமாக ஒரு முறை மட்டும் பதிவு செய்யும் முறையினை தேர்வாணையம் அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி விண்ணப்பதாரர்கள் தொடர்பான நிரந்தர தரவுதளம் பராமரிக்கப்படுகிறது. இப்பதிவானது ஐந்து ஆண்டுகளுக்கு செல்லத்தக்கதாகும். பிறகு இதனைப் புதுப்பித்துக்கொள்ளலாம்.

iv) தேர்வுக்கூடங்களில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறாமல் தடுக்கும் பொருட்டு அனைத்துத் தேர்வுக்கூடங்கள் / அறைகள் ஒளிப்பதிவு கருவிகளின் வழியாக கண்காணிக்கப்படுகிறது.

v) மாற்றுத் திறனாளிகளின் வசதியினை கருத்தில் கொண்டு அனைத்துத் தேர்வுக் கூடங்களிலும் அவர்கள் தரைத் தளத்திலேயே

தேர்வு எழுத அனுமதிக்கப்படுகின்றனர். தேவைப்படின் தேர்வு எழுதுவதற்கு உதவியாளர்களும் நியமிக்கப்படுகின்றனர்.

vi) தேர்வாணையத்தால் தொழில்நுட்பப் பதவிகளுக்கு நடத்தப்படும் தேர்வுகளை, முறைகேடுகள் ஏதுமின்றி நேர்மையாகவும், விரைவாகவும் நடத்தி, முடிவுகளை வெளியிட தேர்வாணையம் கணினிவழி தேர்வுகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

vii) தேர்வு முடிவடைந்த பின்னர் கொள்குறி வகையைச் சார்ந்த தேர்வுகளுக்கான விடைகள் உடனடியாக தேர்வாணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்படும். தேர்வு எழுதிய விண்ணப்பதாரர்களுக்கு இவ்விடைகள் குறித்து ஏதேனும் மறுப்பு இருப்பின் அது குறித்த கோரிக்கைகளை ஏழு நாட்களுக்குள் தேர்வாணையத்திற்கு தெரிவிக்க கால அவகாசம் அளிக்கப்படுகிறது,

viii) தேர்வு எழுதிய விண்ணப்பதாரர்களின் விரிவான விடை எழுதுதல் தொடர்பான விடைத்தாள்

நகலினை தேர்வாணையத்திலேயே பார்வையிட அனுமதி வழங்கப்படுகிறது. இத்தகைய முறை தேர்வாணையத்தின் நடவடிக்கைகளின் வெளிப்படைத்தன்மையினை உறுதிப்படுத்துகிறது.

ix) கடந்த பிப்ரவரி **2012** முதல் தேர்வாணையம், பணி மற்றும் அலகு ஒதுக்கீட்டில் வெளிப்படைத் தன்மையினை ஏற்படுத்தும் பொருட்டு கலந்தாய்வு முறையினை அறிமுகப் படுத்தியுள்ளது. இக்கலந்தாய்வு முறையில் காலிப்பணியிடம் குறித்த விவரங்கள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படுகிறது.

x) துறை பதவி உயர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படும் கருத்துருக்களுக்கு ஒற்றைச் சாளர முறையினை தேர்வாணையம் அறிமுகப்படுத்தி செயல்படுத்துகிறது.

*இ) சாதனைகள்*

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **2013–2014**–ஆம் ஆண்டுகளில் உரிமையியல் நீதிபதிகள் தேர்வு **(162** காலிப் பணியிடங்கள்),

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (தொகுதி–I) (79 காலிப் பணியிடங்கள்), ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (தொகுதி–II) (1,064 காலிப் பணியிடங்கள்), ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (தொகுதி–IIA) (2,269 காலிப் பணியிடங்கள்), கிராம நிருவாக அலுவலர் தேர்வு (2,342 காலிப் பணியிடங்கள்), 2013–ஆம் ஆண்டு தொகுதி–4 தேர்வு (4,963 காலிப் பணியிடங்கள்) ஆகிய தேர்வுகளை நடத்தியது. தொகுதி–4 (2013) தேர்வில் கலந்து கொண்ட அனைத்து விண்ணப்பதாரர்களின் மதிப்பெண் மற்றும் தரவரிசை தேர்வாணையத்தின் இணைய தளத்தில் வெளியிடப்பட்ட நிகழ்வானது தேர்வாணையத்தின் வெளிப்படைத் தன்மையை வெளிப்படுத்துகிறது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடந்த மே 2011 முதல் 31.08.2015 வரை பல்வேறு துறைகளுக்கான 53,356 காலிப் பணியிடங்களுக்கான இறுதி முடிவினை வெளியிட்டுள்ளது.

*ஈ) 2015–2016–ஆம் ஆண்டிற்கான நேரடித் தேர்வுத் திட்ட அறிக்கை*

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 30.01.2015 அன்று 2015–2016–ஆம் ஆண்டிற்கான நேரடித் தேர்வுத் திட்ட அட்டவணையை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலகம் சென்னை, பார்க் டவுன், வ.ஊ.சி. நகரில் சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

**3) தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005**

பொது அதிகார அமைப்பு ஒவ்வொன்றின் செயற்பாட்டில் வெளிப்படையான தன்மையையும், பொறுப்புடைமையையும் மேம்படுத்தும் பொருட்டும், பொது அதிகார அமைப்புகளின் செயல்பாடுகளில் உள்ள தகவலைப் பெறுவதற்கு வழிவகை செய்வதற்கும், இந்திய பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களில், மிக முக்கியத்துவம் வாய்ந்தது 2005–ஆம் ஆண்டு இயற்றப்பட்ட, தகவல் பெறும் உரிமைச் சட்டம் ஆகும்.

**(அ) 2005–ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

2005–ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், விரிவான பலதரப்பட்ட அமைப்புகளுக்கும் பொருந்துவதாக உள்ளது. இச்சட்டம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் அனைத்துத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள், உரிய அரசுகளினால் நேரடியாக அல்லது மறைமுகமாக கணிசமான அளவிற்கு நிதியுதவி அளிக்கப்படுகின்ற அரசு சாரா நிறுவனங்கள் உள்ளிட்ட சொந்தமாக அமைக்கப்பட்ட மற்றும் அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள அல்லது கணிசமான நிதியுதவி அளிக்கப்பட்ட அமைப்புகளுக்கும் பொருந்தும். யாதொரு பொது அதிகார அமைப்பு அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்ற அமைப்புகளை அணுகி, இச்சட்டத்தின் கீழ் ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் தகவல் பெறும் உரிமை உண்டு. இதில், பணியினை, ஆவணங்களை அல்லது பதிவுருக்களைப் பார்வையிடுதல், பொருளின் உறுதிச் சான்றளிக்கப்பட்ட மாதிரிகளை எடுத்தல், கணினி ஒன்றில் அல்லது பிற சாதனம் எதிலும் தகவல் சேகரித்து வைக்கப்பட்டுள்ளவிடத்து,

குறுந்தட்டுகள், நெகிழ் ஒளித்தட்டுகள், நாடாக்கள், காணொலிச்சுருள் பேழைகள் வடிவத்தில் அல்லது பிற மின்னணுப் பதிவுமுறை எதிலும் அல்லது இவற்றின் அச்சுப்படிகளை எடுப்பதன் மூலமாக தகவல் பெறுவதற்கான உரிமையும் அடங்கும். இச்சட்டம், வெளிப்படைத் தன்மை, பயனுள்ள வகையில் தகவலைப் பெறுதல், பொது அதிகார அமைப்புகளின் செயல்பாடுகளில் மிக்கப் பொறுப்புடைமை ஆகியவற்றை உறுதிசெய்கிறது. தாமே முன்வந்து அவற்றின் செயற்பணிகள் குறித்த தகவல்களை வெளியிடுவது பொது அதிகார அமைப்புகளின் தலையாய கடமையாகும். இச்சட்டம் குடிமக்கள் நலனை மையமாகக் கொண்டு ஆளுமை செயற்பட வழிகோலியுள்ளது.

**(ஆ) தமிழ்நாடு தகவல் ஆணையம் கட்டமைப்பு**

2005–ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 15(1)–இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, தமிழ்நாடு அரசினால் தமிழ்நாடு தகவல் ஆணையம் 07.10.2005 அன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மாநில தலைமைத் தகவல் ஆணையர் ஒருவர் மற்றும் மாநில தகவல்

ஆணையர்கள் ஆறு பேர் கொண்டதாக தமிழ்நாடு தகவல் ஆணையம் அமைக்கப்பட்டது. **2005**–ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி அதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்துதல் மற்றும் குறித்தளிக்கப்பட்ட செயற்பணிகளை ஆற்றுதல் ஆகியன ஆணையத்திற்களிக்கப்பட்ட உரிமையாகும். தமிழ்நாடு தகவல் ஆணையம், தற்போது சென்னை–**600 018**, தேனாம்பேட்டை, தியாகராயா சாலையில் எண் **2** என்ற கதவிலக்கத்தில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு சொந்தமான **12,750** சதுர அடி பரப்பளவு கொண்ட வாடகை கட்டிடத்தில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் இயங்கி வருகிறது. தகவல் ஆணையத்தின் பணிகளை கவனிக்க ஒரு செயலாளர், ஒரு பதிவாளர், ஒரு சட்ட அலுவலர் மற்றும் இதரபணியாளர்கள் உள்ளனர். **2005**–ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு **15(4)**–இன் படி, மாநில தகவல் ஆணையத்தின் பொதுக் கண்காணிப்பு, மேலாட்சி மற்றும் அலுவல் மேலாண்மை, மாநில தலைமைத் தகவல்

ஆணையரின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகும். மாநில தலைமை தகவல் ஆணையர் மற்றும் இரண்டு மாநில தகவல் ஆணையர்கள் இவ்வலுவலகத்தில் 09.08.2015 அன்று புதிதாக பதவியேற்றனர்.

**(இ) தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணங்கள்) விதிகள், 2005**

தகவல் பெறுவதற்கான ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் விண்ணப்பக் கட்டணமாக ரூபாய் 10/– ரொக்கமாகவோ அல்லது கேட்பு வரைவோலையாகவோ அல்லது வங்கி காசோலையாகவோ அல்லது கருவூல செலுத்துச்சீட்டின் மூலமாகவோ, நீதிமன்ற கட்டண வில்லையாகவோ அல்லது அஞ்சலக பணவிடையாகவோ செலுத்தலாம். ஆவணங்களின் நகல்களைப் பெறுவதற்கு உரிய கட்டணத்தை ரொக்கமாகவோ, கேட்பு வரைவோலையாகவோ, வங்கி காசோலையாகவோ அல்லது கரூவூல செலுத்துச் சீட்டின் மூலமாகவோ செலுத்தலாம். மேல்முறையீட்டு அலுவலரிடம் செய்யப்படும் முதலாவது மேல்முறையீடு மற்றும் ஆணையத்திடம் செய்யப்படும் இரண்டாவது மேல்முறையீடு ஆகியவற்றிற்கு விண்ணப்பக் கட்டணம் ஏதும்

இல்லை. வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்பவர்களுக்கு விண்ணப்பக் கட்டணம் உட்பட குறிக்கப்பட்ட கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

**(ஈ) தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறை) விதிகள், 2012**

03.09.2012 நாளிட்ட பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (நி.சீ—III) துறையின் அரசாணை நிலை எண் 137—இல் தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறை) விதிகள், 2012 அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. அதில், மேல்முறையீடுகள் செய்யப்படும்போது, மனுதாரர்கள் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் அவ்வாறு செய்யப்பட்ட மேல்முறையீடுகள் மீது தீர்வு காண்பது குறித்த நடைமுறைகள் ஆகியவைகள் அடங்கியுள்ளன. இவ்விதிகள் 2012—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 3—ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

**(உ) தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வழங்கப்பட்டுள்ள சிறப்பு வசதிகள்**

காது கேட்கும் திறன் மற்றும் பார்வைக் குறைபாடு உடையவர்கள், ஆணையத்திற்கு

அளிக்கும் எழுத்துபூர்வமான வேண்டுகோளின் பேரில், இவ்வாணையத்தின் விசாரணையின்போது அவர்களுக்கு உதவிபுரிய எவர் ஒருவரையும் அழைத்துவர அனுமதிக்கப்படுவர்.

பார்வை குறைபாடு உடையவர்களிடமிருந்து தனிப்பட்ட வகையில் கோரிக்கை பெறப்பட்டால் அவர்களுக்கு, சென்னை–56, பூந்தமல்லியில் உள்ள பார்வை குறைபாடுடையவர்களுக்கான தேசிய நிறுவனத்தின் மண்டல மையத்தின் உதவியுடன், ஆணையத்தின் முடிவுகள் / ஆணைகளை பார்வையற்றவர்களுக்கான அச்சு எழுத்து முறையில் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வசதி முதல் முறையாக இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் செய்யப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றோரும் எளிதாக அணுகும் வகையில் மின்தூக்கி இவ்வாணைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

**(ஊ) பொது**

இவ்வாணையத்திடம் செய்யப்படும் இரண்டாவது மேல்முறையீடுகளில் மேல்முறையீடு–தாரர்களால் தங்கள் கைப்பேசி எண்

குறிக்கப்பட்டிருந்தால், அவர்களது மேல்முறையீடுகள் பெறப்பட்டு அதற்கு அளிக்கப்பட்ட வழக்கு எண்கள் குறித்த குறுந்தகவல் சேவை (SMS) பெறும் வசதி இவ்வாணையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த சேவைகள் இலக்கமுறை பிணைய இணைப்பு (ISDN Line) வசதி அண்மையில் இவ்வாணையத்தில் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இதன் வாயிலாக, முக்கிய வழக்குகளில் சிறைக் கைதிகள் மற்றும் பிறரைக் காணொலி மூலம் சிறப்பாக விசாரணை மேற்கொள்ள இயலும்.

இவ்வாணையத்தின் இணைய தளத்தில் (www.tnsic.gov.in) தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 4(1)(b)-இன்படி, இவ்வாணையம் குறித்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட இணைய தளம் முழுவீச்சில் செயற்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதோடு, இவ்வாணையத்தில் செய்யப்படும் இரண்டாவது மேல்முறையீடுகள் மற்றும் புகார்கள் குறித்த வழக்குப் பட்டியல்கள் மற்றும் ஆணையத்தின் ஆணைகள் முதலியன அனைத்தும் இவ்வாணையத்தின் இணைய தளத்தில் பதிவுகள் செய்யப்பட்டுள்ளன.

**4. மாநில விழிப்புப் பணி ஆணையம்**

மத்திய அரசு ஊழியர்கள் மீது வரையறையை உள்ளடக்கி, ஒரு சுதந்திரமான அமைப்பாக, மைய விழிப்புப் பணி ஆணையம் திரு. கே. சந்தானம் அவர்கள் தலைமையிலான ஊழல் தடுப்புக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், 1964–ஆம் ஆண்டு பிப்ரவரியில், மத்திய அரசால் தோற்றுவிக்கப்பட்டது.

பொதுப் பணிகளில் நிருவாகரீதியாக ஊழல் தடுப்பு நடவடிக்கைகளில் அரசுக்கு அறிவுரை வழங்குதல் முதன்மையான நோக்கமாகவும் மற்றும் வெளிச்சத்திற்கு கொண்டுவரப்படும் ஊழல் குறித்த தனி இனங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்குதல் ஆகியவை இவ்வாணையத்தின் நோக்கமாகும்.

இதனைப் பின்பற்றி, மாநில அரசால் 1965–இல், மாநில விழிப்புப் பணி ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. 1964–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தோற்றுவிக்கப்பட்ட, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் விழிப்புப் பணி ஆணையத்திற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும்

கடமையாற்றுதலில் உதவிபுரியும் ஒரு முக்கிய அமைப்பாக செயல்படுகிறது.

***மாநில விழிப்புப் பணி ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளாவன:—***

(i) நாணயமற்ற வகையில் அல்லது ஊழல் புரிந்துள்ளார் என சாட்டுரைக்கப்படுகின்ற அல்லது சந்தேகப்படும் வகையில் நடந்துள்ளாரெனில் அத்தகைய பொது ஊழியர் மீது விசாரணை மேற்கொள்ளுதல்;

(ii) தன்னுடைய அதிகாரத்தை தவறான அல்லது ஊழல் நோக்கத்திற்காக தவறாகப் பயன்படுத்தியதாகவோ அல்லது அதற்காக தனது அதிகாரத்தை உரிய முறையில் பயன்படுத்தாமை பற்றியோ கூறப்படும் புகார் மீது விசாரணை அல்லது புலனாய்வு மேற்கொள்ளுதல்;

(iii) தேவைப்படும் தகவல் மற்றும் புள்ளி விவரங்களை சேகரித்தல்; மற்றும்

(iv) தன் அதிகார வரம்பிற்குட்பட்ட செயல்பாடுகளில் மற்றும் ஆணையத்தின் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட

நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை, அரசுத் துறைகள் அல்லது அரசு நிறுவனங்கள் அல்லது பொது ஊழியரிடமிருந்து கேட்டுப் பெறுதல்;

**அ) மாநில விழிப்புப் பணி ஆணையத்தின் அதிகார வரம்பு**

மாநில விழிப்புப் பணி ஆணையம் பின்வருவனவற்றின்மீது அதிகார வரம்புகளைக் கொண்டுள்ளது.

- தமிழ்நாடு அரசின் அனைத்து பொது / அரசு ஊழியர்கள்
- மாநில அரசின் அனைத்து சட்டபூர்வ அமைப்புகள், கழகங்கள், நிறுவனங்கள்
- பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் உள்ளிட்ட அனைத்துப் பொது ஊழியர்கள்

விழிப்புப் பணி ஆணையம் தனது செயல்பாடுகள் குறித்து ஆண்டறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்கின்றது. இவ்வாண்டறிக்கை அரசால் ஆய்வு செய்யப்பட்டு சட்டப்பேரவை முன் வைக்கப்படுகிறது.

**ஆ) ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம்**

தமிழகத்தில் ஊழல் தடுப்பு நடவடிக்கையினை மேற்கொள்ள ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் முக்கிய பங்காற்றுகிறது. ஊழலைத் தடுக்கும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட சந்தானம் குழுவினரின் அறிக்கையில் கூறப்பட்ட பரிந்துரைகளின்படி தமிழ்நாட்டில் 1964–இல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் உருவாக்கப்பட்டது. இவ்வியக்குநரகத்தின் செயல்பாடு மற்றும் அதன் தலையாய கடமைகளாவன:

- மாநில விழிப்புப்பணி ஆணையத்தின் உத்தரவின் பேரில் ஊழல் குற்றச்சாட்டுகள், அதன் தொடர்பான நடத்தைகள் ஆகியவற்றின் மீது விசாரணை மேற்கொள்ளுதல்.
- இவ்வியக்குநரகத்தால் சேகரிக்கப்படும் தகவல்களையும் புள்ளிவிவரங்களையும் மாநில விழிப்புப்பணி ஆணையருக்கு

தெரியப்படுத்துதல்.

- பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் ஊழல் தொடர்பான புகார்களின் மீது விசாரணை மேற்கொள்ளுதல்
- இலஞ்ச ஊழல் முறைகேடுகளை கண்டறிவதற்காக நுண்ணறிவுத் தகவல்கள் சேகரித்து ஊழல் தடுப்பு சட்டம் 1988–இன் கீழ் அமையும் குற்றங்களை புலனாய்வு செய்தல்
- தக்க ஆதாரத்துடன் கூடிய புகாரின் பேரில், கையூட்டு கேட்கும் பொதுப்பணியாளரை தகுந்த முறைகளைப் பின்பற்றிப் பொறிவைத்துப் பிடித்தல்

பொறி வைத்து பிடிக்கப்படும் பொதுப்பணியாளர்கள் சட்டப்படி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் வைக்கப்படுவர். இது தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட பொதுப்பணியாளர் தகுந்த ஒழுங்கு நடவடிக்கை அலுவலரால் உடனடியாக தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்படுவர். இத்தகைய கடுமையான நடவடிக்கை மற்ற

பொதுப்பணியாளர்கள் தமது பணிகளில் நேர்மையாக செயல்படுவதற்கு வழிவகுக்கும்.

அனைத்துத் துறை தலைவர்கள், அனைத்து உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் கீழ்க்காணும் தகவலை தங்கள் அலுவலகத்தின் தகவல் பலகையில் பார்வையில் படுமாறு வைக்க வேண்டும் என்று அரசு அறிவுறுத்தியுள்ளது.

**“லஞ்சம் கொடுப்பது சட்டத்திற்கு எதிரானதாகும்”**

இது தொடர்பான புகார்களை

**இயக்குநர்,**
**ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,**
**சென்னை–28**

என்ற விலாசத்திற்கு அனுப்பும்படி தெரிவிக்கப்படுகிறது”.

மேலும், அனைத்து துறைச் செயலாளர்களும், துறைத்தலைவர்களும் அவர்களது அலுவலக இணையதளத்தில் பின்வரும் தகவல்களை வெளியிட வேண்டுமென அரசு அறிவுறுத்தியுள்ளது.

**“லஞ்சம் கொடுப்பது சட்டத்திற்கு எதிரானதாகும்”**

இது தொடர்பான புகார்களை

**இயக்குநர்,**
**ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,**
**சென்னை–28**

என்ற விலாசத்திற்கு அனுப்பும்படி தெரிவிக்கப்படுகிறது".

**இணையதள முகவரி : www.dvac.tn.gov.in**

**தொலைபேசி எண் : 24615929 / 24615949 / 24615989.**

அனைத்துத்துறை தலைவர்களும் தங்களது துறையில் இரண்டாம் நிலை அதிகாரத்தில் உள்ள அலுவலர்களை கண்காணிப்பு அலுவலராக நியமித்து ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அலுவலர்கள் மீது விசாரணை நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் உரிய கால இடைவெளியில் துறையில் கண்காணிப்பு அலுவலர் சந்தேகத்திற்குரிய இடங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவும் அரசு அறிவுறுத்தியுள்ளது.

பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், இத்துறையின் செயல்பாடுகள் குறித்து தெரியப்படுத்தவும் ஆண்டு தோறும் சென்னை தீவுத்திடலில் நடைபெறும் சுற்றுலா வர்த்தகப்

பொருட்காட்சியில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் சார்பாக வளாகம் அமைக்கப்பட்டு வருகிறது. அவ்வளாகத்தில், ஊழலுக்கு எதிராக தகவல் பலகைகள், வீடியோ காட்சிகள், பாடல்கள் ஒலித்தல், பொது மக்களை உறுதிமொழி ஏற்க வைத்தல் ஆகிய செயல்பாடுகளுடன் உயர் அலுவலர்கள் அவ்வளாகத்தில் இருந்து இயக்குநரகத்தின் செயல்பாடுகளையும் பார்வையாளர்களுக்கு விவரித்து வருகின்றனர்.

**இ) ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயம்**

மாநில அரசிலும், நகராட்சி நிருவாக அமைப்புகளிலும் பணிபுரியும் அலுவலர்கள் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையால் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய ஏற்படுத்தப்பட்ட அமைப்பே ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயமாகும். இத்தீர்ப்பாயம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையால் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் மீதான விசாரணையின் பொருட்டு தேவைப்படும் சாட்சியங்களை விசாரிக்கவும், தொடர்புடைய ஆவணங்களைக் கோரவும்

அதிகாரங்களை பெற்ற நீதிமுறை சார்புடைய அமைப்பாகும். இவை தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயம்) விதிகள் 1955–இல் கூறப்பட்டுள்ள விதிமுறைகளின் அடிப்படையில் விசாரணை மேற்கொள்கின்றன.

தற்போது சென்னை, திருச்சி, மதுரை, கோவை, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய நகரங்களில் ஆறு ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் / மாவட்ட வருவாய் அலுவலர்கள் தலைமையில் செயல்படும் இத்தீர்ப்பாயங்களில் வழக்கு தொடர்பான விசாரணைக்கு உதவ சட்ட நடவடிக்கை தொடர்புடைய வழக்கறிஞர்கள் (Prosecutors for Disciplinary Proceedings) நியமிக்கப்பட்டுள்ளனர். வழக்கின் மீதான விசாரணை அறிக்கை சம்பந்தப்பட்ட அலுவலர் தொடர்புடைய அரசு நிருவாகத்துறைக்கு தீர்ப்பாயத்தால் அனுப்பப்படும். அவ்வறிக்கையினை ஆய்வு செய்து ஒழுங்கு

நடவடிக்கை மீதான இறுதி ஆணைகளை அரசு பிறப்பிக்கும்.

## 5. பயிற்சி

### (அ) தலைமைச் செயலகப் பயிற்சி நிலையம்

தலைமைச் செயலகப் பயிற்சி நிலையத்தில் நேரடி நியமன உதவிப் பிரிவு அலுவலர்கள், உதவியாளர்கள், நேர்முக எழுத்தர்கள் மற்றும் தட்டச்சர்கள் ஆகியோருக்கு பொது நிருவாக விதிமுறைகள், நிதி நிருவாக விதிமுறைகள் குறித்து 31 வேலை நாட்கள் கொண்ட அடிப்படைப் பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சியின் முடிவில் நடத்தப்படும் தேர்வில் தேர்ச்சி பெறுவது என்பது திருப்திகரமான தகுதிகாண் பருவம் முடிக்கவும், பதவி உயர்வுக்கான பட்டியலில் சேர்க்கவும் தேவையான ஒன்றாகும். மேலும், ஒழுங்கு நடவடிக்கை தொடர்பான பயிற்சியும், நீதிமன்ற வழக்குகள் தொடர்பான பயிற்சியும், அந்நிகழ்வுகளை எப்படி கையாளுவது என்பது தொடர்பான பயிற்சியும் தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது. இதுவரை 84 அணிகளுக்கு

தலைமைச் செயலகப் பயிற்சி நிலையத்தில் அடிப்படைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

தலைமைச் செயலகப் பயிற்சி நிலையத்தில் 29.07.2015 அன்று துவங்கப் பெற்ற 85வது அணியின் பயிற்சி வகுப்பில், அனைத்து தலைமைச் செயலகத் துறைகளிலுள்ள நேரடி நியமனம் மூலம் நியமனம் செய்யப்பட்ட 45 உதவிப் பிரிவு அலுவலர்கள், நேர்முக எழுத்தர்கள் மற்றும் உதவியாளர்கள் ஆகியோருக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) அண்ணா மேலாண்மை நிலையம்**

அண்ணா மேலாண்மை நிலையம் தமிழக அரசின் மாநில நிருவாகப் பயிற்சி நிறுவனமாக செயல்பட்டுவருகிறது. இந்நிலையம் அமைச்சுப் பணியாளர்கள் முதல் அகில இந்தியப் பணிகளின் அலுவலர்கள் வரை அனைத்துத் தரப்பு அரசு ஊழியர்களுக்கும் பயிற்சி தரும் முதன்மை நிறுவனமாக விளங்குகிறது.

இந்நிறுவனத்தினால் கடந்த காலத்தில் பல்வேறு நிலைகளில் பணிபுரியும் பொதுப்

பணியாளர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சிகள், விளைவுகள் மற்றும் விழுமியங்களுடன் கூடிய திறனை உருவாக்குவனவாக அமைந்திருப்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றன.

இந்நிலையத்தில் 2014–2015–ஆம் ஆண்டில் 31.03.2015 முடிய 588 பயிற்சி திட்டங்கள் மூலம் 21,626 அலுவலர்களுக்கும், மதுரை, திருச்சி மற்றும் சேலம் ஆகிய மண்டல மையங்கள் மூலம் 211 பயிற்சி திட்டங்கள் மூலம் 11,378 அலுவலர்களுக்கும் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இஃது அண்ணா மேலாண்மை நிலையத்தின் வரலாற்றுச் சாதனையாகும். இதைப் போல் நடப்பு நிதியாண்டில் (2015–2016) இதுவரை 178 பயிற்சிகளை நடத்தி 6,679 அலுவலர்களுக்கும் / அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன. இது சென்னை பயிற்சி நிலையம் மற்றும் மண்டல மையங்களில் நடைபெற்ற மொத்த பயிற்சிகளாகும். பொது மேலாண்மை பயிற்சிகள் தவிர பேரிடர் மேலாண்மை, மின் ஆளுமை, தகவல் தொழில்நுட்பம், தகவல் பெறும் உரிமைச் சட்டம் ஒட்டுமொத்த தரமேலாண்மை, மக்கள் நல்வாழ்வு மற்றும் மருத்துவமனை

மேலாண்மை ஆகிய பிரிவுகளில் தனிப்பட்ட பயிற்சிகள் இங்கு அளிக்கப்படுகின்றன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், உயர்கல்வி, பள்ளிக்கல்வி, குற்றவழக்குகள் தொடர்புத்துறை, வணிகவரித் துறை, தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், ஆதிதிராவிடர் நலம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, வர்த்தகம்–தொழில் அமைச்சகம், மைய அரசின் போக்குவரத்து நிலையம் ஆகிய நிறுவனங்களுக்கு அவர்களுடைய தேவையின் அடிப்படையில் பயிற்சிகளும், பட்டறைகளும் நடத்தப்படுகின்றன.

பொதுமக்களின் விழிப்புணர்வின் காரணமாகவும் பல துறைகளில் எதிர்பார்ப்புகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் காரணமாகவும் ஆளுகை சில ஆண்டுகளாக மகத்தான மாற்றத்தை (paradigm shift) அடைந்துள்ளது. எனவே, மேம்பட்ட சேவை வழங்கு முறைகளை உறுதிசெய்வதற்கு ஏற்றவாறு பயிற்சிகளை மெருகேற்ற வேண்டிய தேவை எழுந்துள்ளது. இந்த அவசியத்தை உள்வாங்கி இந்நிலையம் மனிதவளத்தையும், மூலாதாரங்களையும்

மேன்மைப்படுத்தி எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்துவருகிறது.

அரசு அலுவலர்கள் சவால்களை சாமர்த்தியமாக சந்திப்பதற்கும், விரைவில் அவர்கள் செயல்திட்டக் குறிக்கோள்களை அடைவதற்கும் அவர்கள் பணிக்காலத்தில் பயிற்சி ஒரு முக்கியமான அம்சமாகும். அவர்கள் நிருவாகத்தில் பொதுவாகவும், தகவல் தொழில்நுட்பத்தில் குறிப்பாகவும் அவ்வப்போது புதுப்பிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் வசம் இருக்கும் நேரத்தை முறையாக செலவிட கச்சிதமாகத் திட்டமிட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். பணியாளர்களை நிருவகிக்கும் அரசு அலுவலர்கள் அவர்களை வரவுக் கணக்கில் வைத்து அவர்களுடைய பயன்கள் உச்சத்தை அடையச் செய்வதற்கு மனிதவள மேம்பாட்டின் கூறுகளான தருவித்தல், பகிர்ந்தளித்தல், தலைமைப் பண்பு, ஊக்கம், ஒழுங்குமுறை, தக்கவைத்தல், இழப்பீடு ஆகியவற்றில் பயிற்சி பெறுவது இக்கணத்தின் அத்தியாவசியமான தேவையாகும். இப்போதுள்ள சூழல் அரசு ஊழியர்கள் ஊக்கமாகவும்,

உற்சாகமாகவும் கடமையாற்ற அவர் தம் தகுதிகாண் பருவத்தில் மனஅழுத்தமின்றி செயல்பட்டு வாழ்க்கைத் திறன்களை கற்றுத் தர வலியுறுத்துவதாக உள்ளது. நேர்மை, ஒருங்கிணைப்பு, பணிவு, நட்புணர்வு, ஈடுபாடு, வலிந்து பணியாற்றும் பண்பு, உண்மை, அர்ப்பணிப்பு, காலம் தவறாமை ஆகிய அடிப்படைப் பண்புகளை அவர்களுக்கு ஊட்டி சமூகத்தின் நலிந்த பிரிவினருக்கு நயமாகப் பணியாற்றும் உயர்ந்த கொள்கைப் பிடிப்பு உள்ளவர்களாகவும் அவர்களை உருவாக்க வேண்டும்.

இந்நிலையம் தன்னாட்சியுடனும், சுயச்சார்புடனும் விளங்க இதன் நிதிச் சார்பான கொள்கை முடிவுகளை ஆட்சி மன்றக் குழு எடுத்துவருகிறது. இந்நிலையத்தின் ஆட்சி மன்றக் குழு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சித் துறை, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் செயல்படுகிறது. இக்குழு, துணைத் தலைவராக அரசுத் தலைமைச் செயலாளரையும், பயிற்சி, கல்வி ஆகியவற்றில் அனுபவம் வாய்ந்த பிற

ஆன்றோர்களையும் கொண்டுள்ளது. மேலாண்மை தொடர்புடைய வல்லுநர்களும் பயிற்சிப் பொருண்மைகளை வலுவாக்கும் பொருட்டு உறுப்பினர்களாக செயல்படுகிறார்கள். 1999–ஆம் ஆண்டு முதல் அண்ணா மேலாண்மை நிலைய இயக்குனர், அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பல்வேறு பயிற்சி நிலையங்களை ஒருங்கிணைப்பதற்காக, பயிற்சித் துறைத் தலைவராகவும் செயல்பட்டுவருகிறார்.

இந்நிலையம் இயங்கி வரும் ‘‘மகிழம்பூ’’ கட்டடம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், கட்டமைப்பை உயர்த்தவும், பயிற்சி நிகழ்வுகளின் தரத்தை மேம்படுத்தவும் 25.05.2005 அன்று திறந்துவைக்கப்பட்டது.

**(i) 2014–2015–ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட சிறப்பு பயிற்சிகள்**

- மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறையின் முதுநிலை மருத்துவ அலுவலர்களுக்கான ‘‘மருத்துவ மேலாண்மை’’ என்ற ஒரு சிறப்பு பயிற்சி மற்றும் அத்துறையின் அமைச்சுப் பணியாளர்களுக்கான அலுவலக

நடைமுறைகள் என்ற தலைப்பில் வழங்கப்படும் பயிற்சி ஆகியவை தமிழ்நாடு சுகாதாரமுறைத் திட்டத்தின் ஆதரவோடு தொடர்ந்து இப்பயிற்சி நிலையத்தால் நடத்தப்படும் ஒரு பயிற்சியாகும். இதுவரையில் நடத்தப்பட்ட **65** அணிகளில் **1,803** முதுநிலை மருத்துவ அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- **2014**–2015–ஆம் ஆண்டில் அண்ணா மேலாண்மை நிலையத்தால் சென்னை, மதுரை ஆகிய இடங்களில் **14** அணிகளில் **272** அரசு வழக்குரைஞர்களுக்கு கணினி பயிற்சி வழங்கப்பட்டது.
- தேசிய அளவில் இந்திய ஆட்சிப் பணியைச் சார்ந்த மூத்த அலுவலர்களுக்கு, இந்திய அரசின் பணியாளர் மற்றும் பயிற்சி அமைச்சகத்தின் நிதி உதவியுடன் “நல்ஆளுகை” என்ற தலைப்பில் **16.09.2013** முதல் **20.09.2013** வரை பயிற்சி அளிக்கப்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளில் நடத்தப்பட்ட இதே போன்ற பயிற்சிக்குக் கிடைத்த வரவேற்பினால் தொடர்ந்து அண்ணா

மேலாண்மை நிலையம் ‘‘திட்ட மேலாண்மை’’ என்ற தலைப்பில் **01.09.2014** முதல் **05.09.2014** வரை இந்திய அரசின் நிதி உதவியுடன் நடத்தப்பட்ட பயிற்சியில் இந்திய ஆட்சிப் பணி மற்றும் இந்திய காவல் பணியை சேர்ந்த **15** மூத்த அலுவலர்கள் கலந்து கொண்டனர். மைய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறையின் நிதி உதவியுடன் **27** இந்திய வனப் பணி அலுவலர்களுக்கு **24.11.2014** முதல் **28.11.2014** வரை பயிற்சி அளிக்கப்பட்டது.

- திருநெல்வேலி, தூத்துக்குடி, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் ‘‘செறிவான மாவட்டப் பயிற்சி (கணினி பயிற்சி உட்பட) – அனைவருக்கும் பயிற்சி’’ என்ற தலைப்பில், **2013**–ஆம் ஆண்டில் சுமார் மூன்று கோடி ரூபாய் மதிப்பீட்டில் பயிற்சிகள் நடத்த இந்திய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு இந்த ஆண்டும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இப்பயிற்சி திட்டத்தின்கீழ் இதுவரை பல்வேறு பயிற்சி வகுப்புகளில் **3,494** பங்கேற்பாளர்கள் பயன்பெறும் வகையில் ஆளுமை மேம்பாடு,

மனோபாவ மாற்றம், விதிகள் மற்றும் கட்டுப்பாடு, கணினி ஆகிய தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டது.

- ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுவது போல் 2014–2015–ஆம் ஆண்டிலும் 54 நேரடி நியமன துணை ஆட்சியர்களுக்கு முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை பயிற்சி அண்ணா மேலாண்மை நிலையத்தால் அளிக்கப்பட்டது.
- மைய அரசின் பணியாளர் மற்றும் பயிற்சித் துறையினால் முன்கொணரப்பட்ட திட்டத்தின் கீழ், மைய அரசின் நிதி உதவியுடன், அண்ணா மேலாண்மை நிலையம், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கோட்பாடுகளை தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் பரப்புவதற்கான ஒரு சிறப்பு திட்டத்தை அமல்படுத்தி வருகிறது. 2013–2014–ஆம் ஆண்டில் ரூ.15.56 இலட்சம் நிதி உதவியுடன் 16 மாவட்டங்களில் இப்பயிற்சி நடத்தி முடிக்கப்பட்டது. இப்பயிற்சியின் செயலாக்கத் திறத்தினைக் கருத்தில் கொண்டு, 2014–2015–ஆம் ஆண்டில் மைய அரசு மீண்டும் ஒரு

திட்டத்தை ரூ.32.00 இலட்சம் நிதி உதவியுடன் வழங்கியுள்ளது. 2014–2015–ஆம் ஆண்டில் நான்கு பயிற்சிகள் நடத்தப்பட்டன. எஞ்சிய பயிற்சிகள் 2015–2016–ஆம் ஆண்டில் நடத்தப்பட்டு வருகிறது.

- 2012–ஆம் ஆண்டு தொகுப்பில் இருந்து, தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட 9 இந்திய ஆட்சிப் பணிப் பயிற்சி அலுவலர்களின் (தகுதிகாண் பருவத்தினர்) ஆற்றலை அதிகரிக்கும் வகையில், ஒரு மாத கால பணியறிமுகப் பயிற்சி 2014–ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. மாவட்டப் பயிற்சிக்குச் செல்வதற்கு முன்பு பல்வேறு துறைகளின் செயல்பாடுகள் குறித்து பரந்துபட்ட பார்வை கிடைத்ததால் பயிற்சியாளர்கள் இந்த பயிற்சியினை வெகுவாக விரும்பினார்கள். இப்பயிற்சி 2012, 2013 மற்றும் 2014–ஆம் ஆண்டு தொகுப்பினைச் சார்ந்த அலுவலர்களுக்கும் தொடர்ந்து நடத்தப்பட்டது.
- அரசு ஆணை (நிலை) எண் 404, வருவாய்த் துறை, நாள் 11.10.2013 மூலம் தமிழக அரசு

பேரிடர் மேலாண்மையில் வருவாய் உதவியாளர்கள், துணை வட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், துணை ஆட்சியர்கள் ஆகியோருக்கு பயிற்சியளிக்கும் பொறுப்பு அண்ணா மேலாண்மை நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இதன் முதல் நிகழ்வு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 27.12.2013 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இப்பயிற்சி பலமாவட்டங்களில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. ஏனைய மாவட்டங்களில் 2015–2016–ஆம் ஆண்டு பயிற்சி நடத்தப்படுகிறது. துணை ஆட்சியர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி, வல்லுநர்களையும் பேரிடர் மேலாண்மையில் அனுபவம் வாய்ந்த அலுவலர்களையும் கொண்டு 24.02.2014, 25.02.2014 ஆகிய நாட்களில் நடத்தி முடிக்கப்பட்டது. இப்பயிற்சி அண்ணா மேலாண்மை நிலைய மகிழம்பூ வளாகத்திலுள்ள பொன்னரங்கத்தில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்

அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. ஏனைய பயிற்சிகள் **2015–2016–**ஆம் ஆண்டில் நடத்தப்படும்.

- அண்மையில் மத்திய அரசு பணியாளர் மற்றும் பயிற்சித் துறை மக்களுடன் நேரடித் தொடர்புள்ள பணியாளர்களுக்கான அறிமுகப் பயிற்சியினை மூன்று மாநிலங்களில் முன்னோடித் திட்டமாக நடத்துவதற்கு தமிழ்நாடு, மகாராஷ்டிரா மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆகிய மூன்று மாநிலங்களைத் தேர்வு செய்து உள்ளது. இத்திட்டத்தின்படி ஒவ்வொரு மாநிலத்திலும் தெரிவு செய்யப்படும் ஐந்து மாவட்டங்களில் இரண்டு வாரகால அளவிலான ஐந்து பயிற்சிகள் நடத்தப்படும். மக்களுடன் நேரடித் தொடர்புள்ள பணியாளர்களின் பொதுவான ஆளுமைத்திறன் மனப்பாங்கு குறித்த பொதுவான திறன்களையும், துறை சார்ந்த குறிப்பிட்ட திறன்களையும், ஆளுமையும் மேம்படுத்தி பொதுசேவையின் தரத்தை உயர்த்துவதே இவ்வறிமுகப் பயிற்சியின் நோக்கமாகும். தமிழ்நாட்டில்

இப்பயிற்சித் திட்டம் அண்ணா மேலாண்மை நிலையத்தால் செயலாக்கப்படுகிறது. முதல் பயிற்சி நிகழ்ச்சி **05.01.2015** அன்று சென்னையில் துவக்கப்பட்டது. இம்முன்னோடி திட்டத்திற்காக மைய அரசு ரூ.**1.80** கோடி சிறப்பு நிதியுதவியினை அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு வழங்கியுள்ளது. அண்ணா மேலாண்மை நிலையம் **25** அணிகளாக அனைத்து பயிற்சிகளையும் நடத்தி முடித்ததோடு இம்முன்னோடி திட்டத்தில் **1000** அரசு பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்ற இலக்கினையும் விஞ்சியுள்ளது.

**(ii) “அ” மற்றும் “ஆ” பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி நிலையம், சென்னை—28**

‘‘அ’’ மற்றும் ‘‘ஆ’’ பிரிவு அடிப்படை பயிற்சி நிலையம் மகிழம்பூ வளாகத்திற்கு அருகில் இருக்கும் காஞ்சி வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையத்தில் நேரிடையாகவும், பதவி உயர்வின் மூலமாகவும் பணியமர்த்தப்பட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த

“அ” மற்றும் “ஆ” பிரிவு அலுவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. வெற்றிகரமாகப் பயிற்சியை முடித்து, இறுதியில் நடத்தப்படும் தேர்வில் தேர்ச்சி பெறுவது பயிற்சியாளரின் தகுதிகாண் பருவத்தை நிறைவடைவதற்கு கட்டாயமானதாகும். இப்பயிற்சி நிலையம் மாவட்ட வருவாய் அலுவலரால் நிருவகிக்கப்படுகிறது.

2014–2015–ஆம் ஆண்டில் 24 அணிகளில் 739 அலுவலர்கள் பயிற்சியை முடித்துள்ளனர். 2015–2016–ஆம் ஆண்டில் இதுவரை 6 அணிகளில் 154 அலுவலர்கள் பயிற்சியை முடித்துள்ளனர். அனைவரும் திருப்திகரமாக பயிற்சியை முடித்து தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர். வேளாண்மைத் துறை மற்றும் கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை அறிவியல் துறை ஆகியவற்றில் பயிற்சி பெற வேண்டிய அலுவலர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தமையால் ‘அ’ பிரிவு அடிப்படை பயிற்சியில் ஒரு அணியும், அத்துறைத் தலைவர்களின் ‘ஆ’ பிரிவு அடிப்படை பயிற்சியில் நான்கு அணிகளும் ஆக ஐந்து சிறப்பு அணிகள் நடத்தப்பட்டு

இத்துறையின் அலுவலர்களுக்கு கூடுதல் நிதிச் செலவினமின்றி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நிலையத்தில் காலியாக இருந்த சட்ட விரிவுரையாளர் பணியிடம் **2013–**ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பப்பட்டு, பயிற்சி அலுவர்களுக்கு முழு நேர சட்டம் சார்ந்து பயிற்றுவிக்கப்படுகிறது.

மேலும் இப்பயிற்சி நிலையத்தில் அலுவலக நிருவாகம், நிதி நிருவாகம், பொது நிருவாகம், மேலாண்மை கோட்பாடுகள், பொது நிதி, பொருளாதாரம், திட்டமும் வளர்ச்சியும், கணினிப் பயன்பாடுகள் ஆகிய பொருண்மை தொடர்பான திருத்தம் செய்யப்பட்ட பாடதிட்டங்கள் அனுபவமிக்க சிறப்பு விரிவுரையாளர்கள் மூலம் பயிற்று–விக்கப்படுகிறது.

**(iii) அகில இந்திய குடிமைப்பணி தேர்வு பயிற்சி மையம், சென்னை–600 028**

**1966–**ஆம் ஆண்டு பட்டியலினத்தைச் சார்ந்த தேர்வர்களுக்கு பயிற்சியளிக்க முன்தேர்வு பயிற்சி மையம் தொடங்கப்பட்டது. அதைப் போன்றே

**1971–**ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட – மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்காக சிறப்புப் பயிற்சி மையம் அமைக்கப்பட்டது. இவ்விரண்டு மையங்களும் ஒன்றிணைக்கப்பட்டு **"அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வு பயிற்சி மையம்"** என்று பெயரிடப்பட்டு **2000–**ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முதல் இயக்குநர், அண்ணா மேலாண்மை நிலையம் மற்றும் பயிற்சித் துறைத் தலைவர், சென்னை–**28** அவர்களின் நிருவாக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.

இங்கு பயிற்சி பெறும் மாணவர்களுக்கு கட்டணமின்றி உண்டி, உறையுள் வசதி அளிக்கப்படுகிறது. அரசாணை (நிலை) எண் **123**, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி–**3**) துறை, நாள் **15.10.2013** மூலம், இம்மாணவ / மாணவியர்களிடம் வருமான வரம்பை நீக்கி, உணவுக் கட்டணம் வசூலிப்பதை முழுவதுமாக கைவிடுமாறு அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் ரூ.**1,00,000/–** பெற்றோர் வருட வருமான வரம்பாக இருந்த நிபந்தனை நீக்கப்பட்டு சமூக நீதி முழுமையாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

* *முதல் நிலை தேர்வுக்கான பயிற்சி (Preliminary Examination)*

ஒவ்வோர் ஆண்டும் நுழைவுத் தேர்வின் மூலம் முதல் நிலை தேர்வு பயிற்சிக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். 2014–ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட நுழைவுத் தேர்வின் மூலம் மத்திய தேர்வாணையத்தால் நடத்தப்படும் 2015–ஆம் ஆண்டு முதல் நிலைத் தேர்வுக்கான பயிற்சி அளிக்க 325 பயிற்சியாளர்கள் (225 முழுநேரப் பயிற்சியாளர்கள் + 100 பகுதி நேரப் பயிற்சியாளர்கள்) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அரசாணை (நிலை) எண் 149, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி–3) துறை, நாள் 19.12.2013 மூலம், மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை 200–லிருந்து 225 ஆக உயர்த்தி அரசு ஆணையிடப்பட்டுள்ளது. பயிற்சி மையத்தின் உள்கட்டமைப்பு வசதிகளான உண்டி, உறையுள் வசதி அதிகரிக்கப்பட்டிருப்பதே இந்தக் கூடுதல் சேர்க்கைக்கு வழிவகுத்துள்ளது. 2011–2012–ஆம் ஆண்டு முதல் அனைத்து மாவட்ட ஆட்சியரக அலுவலகங்கள் மூலமாக ICR (Intelligence Character Reader) விண்ணப்பங்கள்

மாணவர்களுக்கு வழங்கப்பட்டு நுழைவுத் தேர்வு நடத்தப்படுகிறது. 2013–ஆம் ஆண்டு நுழைவுத் தேர்வுக்கு 8,240 நபர்கள் விண்ணப்பித்திருந்தார்கள். அவர்களில் 6,382 பேர் தேர்வை எதிர்கொண்டார்கள். இந்நிலையத்தின் வசதிகளால் அதிகரித்திருக்கும் வெற்றி விகிதத்தைக் கண்டு 2014–ஆம் ஆண்டு 9,626 நபர்கள் விண்ணப்பித்தார்கள். அவர்களில் 6,654 பேர் நுழைவுத் தேர்வை எதிர்கொண்டார்கள்.

*சேர்க்கைக்கான இடஒதுக்கீடு பின்வருமாறு:*

| **இனம்** | **2013 வரை** | | **2014 முதல்** | |
|---|---|---|---|---|
| | **முழு நேரம்** | **பகுதி நேரம்** | **முழு நேரம்** | **பகுதி நேரம்** |
| ஆதி திராவிடர் | 82 | 41 | 92 | 41 |
| அருந்ததியர் | 16 | 08 | 18 | 08 |
| பழங்குடியினர் | 02 | 01 | 03 | 01 |
| மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 36 | 18 | 40 | 18 |
| பிற்படுத்தப்பட்டோர் | 48 | 24 | 54 | 24 |
| பிற்படுத்தப்பட்ட – (முஸ்லீம்) | 06 | 03 | 07 | 03 |
| மாற்றுத் திறனாளிகள் | 06 | 03 | 07 | 03 |
| இதர வகுப்பினர் | 04 | 02 | 04 | 02 |
| **மொத்தம்** | 200 | 100 | 225 | 100 |

இப்பயிற்சி முதல் நிலைத் தேர்வுக்கு ஏறத்தாழ ஒன்பது மாத கால அளவில் (டிசம்பர் முதல் ஆகஸ்ட் வரை) வழங்கப்பட்டு வருகிறது.

* *முதன்மைத் தேர்வு பயிற்சி (Main Examination)*

குடிமைப் பணித் தேர்வுகள் மூன்று கட்டங்களில் நடத்தப்படுகின்றன. முதல் நிலைத் தேர்வு, தெரிவு வினா அடிப்படையில் ஒருவரின் தகுதியை அறிந்து அதன் மூலம் உயர் நிலை முதன்மைத் தேர்வை எதிர்கொள்ள ஆற்றல் கொண்ட தேர்வர்களைக் கண்டறிய நடத்தப்படுகிறது. முதன்மைத் தேர்வில் வெற்றி பெறுகிறவர்கள் புது தில்லியிலுள்ள மத்திய தேர்வாணையத்தால் நடத்தப்பெறும் ஆளுமைத் தேர்வுக்கு அழைக்கப்படுகிறார்கள். முதன்மைத் தேர்விலும், ஆளுமைத் தேர்விலும் பெறும் மதிப்பெண்கள் கூட்டப்பட்டு தரவரிசை நிர்ணயிக்கப்பட்டு காலியிடங்களுக்கு ஏற்ப வெற்றி பெற்றவர்கள் பட்டியல் வெளியாகின்றது. தர வரிசை, பணியிடங்கள்

ஆகியவற்றைப் பொருத்து தேர்வானவர்களின் விருப்பங்கள் ஏற்கப்படுகின்றன.

ஒவ்வோர் ஆண்டும் முதல் நிலை தேர்வு முடிவுகள் வரப்பெற்றவுடன், வெற்றி பெற்றவர்கள் முதன்மைத் தேர்வினை எதிர்கொள்ளும் பொருட்டு சுமார் நான்கு மாத காலம் உரிய பயிற்சி (ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை) அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி மையத்தில் பயின்று வெற்றிப் பெற்ற மாணவர்கள் அல்லாமல் இதர மாணவர்களும் பயிற்சி மையத்தில் சேர்ந்து பயிற்சி பெறுகின்றனர். 2013–2014–ஆம் ஆண்டில் 200 மாணவ / மாணவியர்களுக்கு குடிமைப்பணித் தேர்வில் முதன்மைத் தேர்வுக்கான பயிற்சி அளிக்கப்பட்டது. 2013–ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 109 மாணவர்களுள் 57 மாணவர்கள் இப்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றவர்கள் ஆவர். 2014–ஆம் ஆண்டில் பயிற்சி பெற்ற 225 மாணவர்கள் மத்திய தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட முதன்மைத் தேர்வு – எழுத்துத் தேர்வில் கலந்து கொண்டனர். இப்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றவர்களில் 73 மாணவர்கள் அகில இந்திய குடிமைப்

பணிகளுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். முதன்மைத் தேர்வுக்கு பயிற்சி பெறும் மாணவர்களுக்கு வருமான உச்ச வரம்பின்றி மாதம் ரூ.3,000/– உதவித் தொகை, படிக்கும் தகவல்களைத் திரட்டும் பொருட்டு வழங்கப்படுகிறது.

* *மாதிரி ஆளுமைத் தேர்வு*

முதன்மைத் தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு இந்நிலையம் மாதிரி ஆளுமைத் தேர்வை நடத்தி வருகிறது. புது தில்லியில் நடைபெறும் ஆளுமைத் தேர்வுக்கு வெகுநாட்கள் முன்னதாக இது நடத்தப்படுகிறது. மேலும் புது தில்லியில் ஆளுமைத் தேர்வு நடைபெறும் நாட்களில் தமிழ்நாடு இல்லத்தில் சலுகைக் கட்டணத்தில் தங்கி இயல்பாக அதை எதிர்கொள்ள உரிய அரசு அனுமதி பெற்று தங்கும் வசதி வழங்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கு இடைநிகழ்வுச் செலவிற்கு ரூ. 2,000/– வழங்கப்படுகிறது.

** பயிற்சி ஆசிரியர்கள்*

இப்பயிற்சி மையத்தில் ஒரு முதல்வர், இரண்டு முழு நேரப் பேராசிரியர்கள் அல்லாமல், 20—க்கும் அதிகமான அழைப்பு விரிவுரையாளர்களைக் கொண்டு 23—க்கும் மேற்பட்ட பாடப் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி மையத்தில் அழைப்பு விரிவுரையாளர்களுக்கு அரசு ஆணை (நிலை) எண் 161, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (பயிற்சி—3) துறை, நாள் 20.11.2012 மூலம் மதிப்பூதியம் ரூ.750/—லிருந்து ரூ.2,000/—ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

இப்பயிற்சி மையத்தில் சுமார் 21,000 புத்தகங்கள் கொண்ட நூலகமும், கணினி வசதிகளும் உள்ளன. நடப்பு நிகழ்வுகளில் நன்றாக நுணுக்கங்களை அறிந்து கொள்வதற்காக ஒரு வாசிப்பு அறையும் அமைந்துள்ளது.

** அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையத்தின் புதிய கட்டடம்*

இப்பயிற்சி மையம் 1984–ஆம் ஆண்டு முதல் அண்ணா நகரில் உள்ள தமிழ் நாடு வீட்டு வசதி வாரிய வாடகை குடியிருப்பில் இயங்கி வந்தது. முப்பது ஆண்டு கால பழமையான இக்கட்டடத்தில் பயிற்சியாளர்கள் குறைந்த வசதிகளுடன் சமரசம் செய்துகொண்டு பயிற்சி பெற்று வந்தனர்.

மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டும் தற்போது நிலவிவரும் கடுமையான போட்டிகளை அவர்கள் எதிர்கொள்ளும் வகையிலும் நவீன வசதிகள் கொண்ட ஒரு புதிய பயிற்சி மையம் ஒன்பது மாத காலத்தில் அண்ணா மேலாண்மை நிலையத்தின் காஞ்சி வளாகத்தில் கட்டி முடிக்கப்பட்டது. தங்கள் மாநிலத்திலும் இதுபோன்ற மையத்தை உருவாக்கும் பொருட்டு ஆந்திரப் பிரதேசத்திலிருந்து அதிகாரிகள் வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளனர். கர்நாடக அரசும் இம்மையம் குறித்த தகவல்களைக் கடிதம் மூலம் பெற்றுள்ளது.

புதிய நவீன பயிற்சி மையம் ரூ.1,014.00 இலட்சம் மதிப்பீட்டில் 50,843 சதுர அடியில் மூன்று அடுக்குகளுடன் குளிர்சாதன வசதியுடன் கூடிய

கூட்ட அரங்கு, வகுப்பறை, கணினி அறை, நூலகம், நவீன சமையல் கூடம் ஆகியவற்றை உள்ளடக்கியது. அறைகலன்களுடன் கூடிய தங்கும் வசதி 225 பேருக்கு அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய கட்டடத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 12.10.2012 அன்று திறந்து வைத்தார்கள்.

*2000 ஆண்டு முதல் வெற்றி பெற்ற மாணவ / மாணவியர்கள் (489 மாணவ / மாணவியர்கள்) எண்ணிக்கை விவரம் பின்வருமாறு*

| வ. எண் | வருடம் | தேர்வு (UPSC) | தேர்வு எழுதிய மாணவர்களின் எண்ணிக்கை | | | | | தேர்ச்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மா.தி/ இவ | இபிவ | ஆதி | பகு | மொத்தம் | மா.தி/ இவ | இபிவ | ஆதி | பகு | மொத்தம் |
| 1 | 2000 முதல் 2010 வரை | முதல் நிலை தேர்வு | 136 | 1260 | 1333 | 26 | 2755 | 16 | 324 | 93 | 01 | 434 |
| | | முதன்மை தேர்வு | 70 | 1194 | 588 | 10 | 1862 | 18 | 467 | 128 | 03 | 616 |
| | | நேர்காணல் | 46 | 662 | 174 | 7 | 889 | 25 | 238 | 71 | 02 | 336 |
| 2 | 2011 | முதல் நிலை தேர்வு முழு நேரம் | 10 | 90 | 98 | 02 | 200 | 0 | 11 | 03 | 0 | 14 |
| | | பகுதி நேரம் | 05 | 45 | 49 | 01 | 100 | 0 | 02 | 3 | 0 | 05 |
| | | முதன்மை | | 114 | 52 | 01 | 167 | 0 | 40 | 12 | 01 | 53 |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நேர்காணல் | 12 | 93 | 22 | 02 | 129 | 06 | 33 | 06 | 02 | **47** |
| 3 | 2012 | முதல் நிலை தேர்வு முழு நேரம் | 10 | 90 | 98 | 02 | 200 | 0 | 18 | 08 | 0 | 26 |
| | | பகுதி நேரம் | 05 | 45 | 49 | 01 | 100 | 0 | 01 | 0 | 0 | 01 |
| | | முதன்மை | 08 | 147 | 35 | 01 | 191 | 02 | 55 | 11 | 01 | 69 |
| | | நேர்காணல் | 12 | 103 | 20 | 01 | 136 | 05 | 34 | 09 | 01 | **49** |
| 4 | 2013 | முதல் நிலை தேர்வு முழு நேரம் | 10 | 90 | 98 | 02 | 200 | 02 | 26 | 11 | 0 | 39 |
| | | பகுதி நேரம் | 05 | 45 | 49 | 01 | 100 | 0 | 03 | 02 | 0 | 05 |
| | | முதன்மை | 05 | 144 | 50 | 01 | 200 | 0 | 44 | 12 | 02 | 58 |
| | | நேர்காணல் | 07 | 111 | 22 | 01 | 141 | 05 | 41 | 11 | – | **57** |
| | **மொத்தம்** | | 341 | 4233 | 2737 | 59 | 7370 | 79 | 1337 | 380 | 13 | **1809** |
| 5 | 2014 | முதல் நிலை தேர்வு முழு நேரம் | 11 | 101 | 110 | 03 | 225 | 04 | 28 | 15 | – | 47 |
| | | பகுதி நேரம் | 05 | 45 | 49 | 01 | 100 | 02 | 05 | 01 | – | 08 |
| | | முதன்மை | 06 | 144 | 73 | 02 | 225 | – | 45 | 20 | – | 65 |
| | | நேர்காணல் | 13 | 121 | 42 | – | 176 | 08 | 46 | 19 | – | 73 |
| **2000 முதல் 2013 வரையில் வெற்றி பெற்ற தேர்வர்கள்** | | | | | | | | | | | | **489** |

* *மதுரை, கோயம்புத்தூர் – குடிமைப்பணிகள் பயிற்சி மையம்*

சென்னையில் உள்ள அகில இந்திய குடிமைப்பணி பயிற்சி மையத்தை போன்று அகில

இந்திய குடிமைப்பணிகள் / அகில இந்திய காவல் பணிகள் பயிற்சி அளிக்க, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை மற்றும் பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் ஆகிய இரண்டு இடங்களில் கிராமப்புற மாணவர்களின் நலன்களை கருத்தில் கொண்டு, அண்ணா நூற்றாண்டு குடிமைப்பணிகள் பயிற்சி மையம் என்ற பெயரில் புதியதாக இரண்டு பயிற்சி மையங்கள் அரசால் தொடங்கப்பட்டுள்ளன. இப்பயிற்சி மையங்களில் மத்திய தேர்வாணையத்தின் முதல்நிலைத் தேர்விற்கு மட்டும் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2014–ஆம் ஆண்டு நடைபெற்ற முதல்நிலைத் தேர்வில் கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தில் இயங்கும் அண்ணா நூற்றாண்டு குடிமைப் பணிகள் பயிற்சி மையத்திலிருந்து கலந்து கொண்ட 62 மாணவர்களில் 4 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

**(இ) தமிழ்நாடு அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்**

தமிழக அரசின் அனைத்துத் துறைகளில் உள்ள இளநிலை உதவியாளர்களுக்கும் /

உதவியாளர்களுக்கும் அடிப்படைப் பயிற்சியை வழங்கும் பொருட்டு பவானிசாகரில் அரசு அலுவலர் பயிற்சி நிலையம் 1974–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அலுவலக நடைமுறை, பணிப்பொருண்மை, பொதுமக்கள் தொடர்பு, ஊரக வளர்ச்சி, நிதி – கணக்கு ஆகியவை பயிற்சியளிக்கப்படும் முக்கிய தலைப்புகளாகும். அரசு 1999–ஆம் ஆண்டு முதல் அமைச்சுப் பணியாளர்களை நவீனமான மற்றும் கணினிமயமான நிருவாகமுறைக்கேற்ப தகுதிப்படுத்தும் பொருட்டு கணினிப் பயிற்சியை அறிமுகப்படுத்தியுள்ளது.

இப்பயிற்சி நிலையம் மாவட்ட வருவாய் அலுவலர் அளவிலான முதல்வரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. அது தவிர, ஐந்து துணை ஆட்சியர்கள், கருவூலம் மற்றும் கணக்குத் துறையைச் சார்ந்த ஐந்து கணக்கு அலுவலர்கள், ஊரக வளர்ச்சி துறையைச் சார்ந்த இரண்டு உதவி இயக்குநர்கள் இந்நிலையத்தில் பேராசிரியர்களாக பணியாற்றி வருகிறார்கள். கணினி விரிவுரையாளர் மற்றும் அமைப்பாளர் பணியும் கணினியைக் கற்றுத் தர உருவாக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையைச் சார்ந்த

ஒரு உடற்கல்வி ஆசிரியர், பயிற்சியாளர்களுக்கு உடற்பயிற்சியை அளித்து வருகிறார்.

இப்பயிற்சி நிலையத்தில் பின்வரும் பயிற்சித்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

*i) அடிப்படைப் பயிற்சி* **:** இப்பயிற்சி மாநில அரசின் பின்வரும் பிரிவுகளைச் சார்ந்த அமைச்சுப் பணி மற்றும் நீதித் துறை அமைச்சுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படுகிறது.

அ) அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் / கருணை அடிப்படையில் நியமனம் பெற்ற இளநிலை உதவியாளர்கள்.

ஆ) **01.10.1978–**க்கு பின்னர் நேரடி நியமனம் பெற்ற உதவியாளர்கள்.

இ) **27.11.1992–**க்கு பின்னர் உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்ற தட்டச்சர்கள்.

ஈ) **15.02.1994–**க்கு பின்னர் இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்ற அலுவலக உதவியாளர், பதிவுரு எழுத்தர்கள்.

உ) உதவியாளர்களாக நியமனம் பெற்ற சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள்.

*ii) பணியிடைப் பயிற்சி:* வருவாய்த் துறையைச் சார்ந்த துணை வட்டாட்சியர்களுக்கு நான்கு வார கால (அரசு விடுமுறைகள் உட்பட 28 நாட்கள்) பணியிடைப் பயிற்சி வழங்கப்படுகிறது.

*iii) நடைமுறைப் படுத்தப்படும் பயிற்சி நிகழ்வுகள்*

இளநிலை உதவியாளர் / உதவியாளர்களுக்கு வழங்கப்படும் வழக்கமான அடிப்படைப் பயிற்சி விடுமுறைகளையும் சேர்த்து 60 நாட்கள் கால அளவைக் கொண்டது. 1998 முதல் 2008 வரையில் பயிற்சி அளிப்பதில் உள்ள தேக்க நிலையை களைவதற்காக 35 நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சியினை அளிக்க அரசு ஆணையிட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக நிலுவையிலிருந்த 5,551 அமைச்சுப் பணியாளர்களுக்கு பயிற்சியளிக்க அரசு குறுகிய கால அடிப்படை பயிற்சியை நடத்த பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி)

துறை, அரசாணை (நிலை) எண் 110, நாள் 08.09.2011 மூலம் ஆணையிட்டது. இக்குறுகிய காலப் பயிற்சி 37 வேலை நாட்கள் கொண்டதாக கோயம்புத்தூர், வேலூர், திருச்சி, தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள காவலர் பயிற்சிப் பள்ளிகளில் ஓய்வு பெற்ற மாவட்ட வருவாய் அலுவலர்கள் மையப் பொறுப்பாளர்களாகவும், 48 ஆ–பிரிவு அலுவலர்கள் மதிப்பூதியத்துடன் அழைப்பு விரிவுரையாளர்களாக பணியமர்த்தி நடைமுறைப்படுத்த உத்தரவிடப்பட்டது. 2011 செப்டம்பர் முதல் 2012 செப்டம்பர் வரை 5,792 அமைச்சுப் பணியாளர்கள் இந்த மையங்களில் பயிற்சியை முடித்தனர்.

இது தவிர பவானிசாகரில் வழக்கமான இரண்டு மாத அடிப்படைப் பயிற்சியும் 2013–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் வரை வழங்கப்பட்டது. பவானிசாகர் பயிற்சி நிலையத்தில் 2012–2013–ஆம் ஆண்டு 60 நாட்கள் அடிப்படைப் பயிற்சி 1,871 அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும், கோயம்புத்தூர், வேலூர், திருச்சி, தூத்துக்குடி ஆகிய இடங்களிலுள்ள காவலர் பயிற்சி பள்ளிகளில்

37 நாட்கள் குறுகிய காலப் பயிற்சி 1,921 அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது.

2013–2014–ஆம் ஆண்டு 60 நாட்கள் அடிப்படைப் பயிற்சி 1,032 அமைச்சுப் பணியாளர்களுக்கு பவானிசாகரில் வழங்கப்பட்டது. நிலுவையிலுள்ள பயிற்சி பெறவேண்டியவர்களின் எண்ணிக்கை மறுபடியும் அதிகரித்ததால் அரசு அடிப்படைப் பயிற்சி குறுகிய காலப் பயிற்சியாக 41 நாட்களுக்கு நிலையத்திலேயே வழங்க பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை, அரசாணை (நிலை) எண் 94, நாள் 26.07.2013 மூலம் ஆணையிட்டது. அதன்படி அடிப்படைப் பயிற்சி குறுகிய காலப் பயிற்சியாக 41 நாட்களுக்கு 2013–ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை 4,857 பணியாளர்கள் பதின்மூன்று அணிகளாக பயிற்சியளிக்கப் பட்டுள்ளார்கள்.

மீண்டும் பயிற்சி பெற வேண்டிய பணியாளர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்ததால் கோவை, திருச்சி, வேலூர், சேலம்

ஆகிய இடங்களிலுள்ள காவலர் பயிற்சி பள்ளிகள் 37 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சியினை நடைமுறைப்படுத்த அரசு ஆணை எண் 120, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் (பயிற்சி–1) துறை நாள் 19.11.2014–ன் மூலம் அனுமதிக்கப்பட்டு இதற்கென ரூ.175.60 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இவ்வரசாணையின்படி ஓராண்டு காலத்தில் எட்டு அணிகளில் 7,976 அமைச்சுப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். முதல் அணி 10.12.2014 முதல் 28.01.2015 வரை கோவை, திருச்சி, வேலூர் ஆகிய 3 மையங்களில் நடத்தப்பட்டது. இரண்டாம் அணி முதல் ஐந்தாம் அணிகளில் தொடர்ந்து கோவை, திருச்சி, வேலூர், சேலம் ஆகிய 4 மையங்களில் இதுவரை மொத்தம் 4,493 அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

அமைச்சுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் அடிப்படைப் பயிற்சியைத் தவிர துணை வட்டாட்சியர்களுக்கு நான்கு வாரகால (விடுமுறை நாட்களை உள்ளடக்கிய 28 நாட்களுக்கு) இடைநிலைப் பயிற்சி இந்நிலையத்தால் 1981–ஆம்

ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இது வரை **138** அணிகளில் **3,173** துணை வட்டாட்சியர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்கள். இந்நிலையம் வணிக வரி அலுவலர்கள், தமிழ்நாடு மின்சார உற்பத்தி – விநியோக வாரியத்தின் கணக்கு அலுவலர்கள், சத்துணவுப் பணியாளர்கள், ஊரக வளர்ச்சித் துறையின் அமைச்சுப் பணியாளர்கள் ஆகியோருக்கும் சிறப்புப் பயிற்சிகள் நடத்தி வருகின்றது. இப்பயிற்சி நிலையம் துவங்கப்பட்டது முதல் இன்று வரை பல்வேறு பிரிவுகளை சார்ந்த மொத்தம் **1,00,554** அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள்.

*iv) பேரிடர் மேலாண்மைப் பயிற்சி*

வருவாய்த் துறையைச் சார்ந்த பல்வேறு நிலை அலுவலர்களுக்கு பேரிடர் மேலாண்மை பயிற்சி அளிக்க **ரூ.250.00** இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை (நிலை) எண் **404**, வருவாய்த் [பே.மே. III (2)] துறை, நாள் **11.10.2013** மூலம் அரசு உத்தரவிட்டுள்ளது. அதில் **ரூ.100.00** இலட்சம் வருவாய்த் துறையைச் சார்ந்த **8,000**

இளநிலை உதவியாளர்கள் / உதவியாளர்களுக்கு இரண்டு நாட்கள் பயிற்சி அளிக்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சியினை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு இப்பயிற்சி நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி 05.02.2014 அன்று தொடங்கப்பட்டு, 12.08.2015 வரை 4,702 பணியாளர்களுக்கு 136 அணிகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

* *உணவு விடுதி*

செலவுப் பகிர்வு முறையில் ஆரோக்கியமான உணவை வழங்க, நிலையத்தில் ஓர் உணவு விடுதி செயல்பட்டு வருகிறது. விரிவுரையாளர்களாக ஐந்து கணக்கு அலுவலர்கள் நியமிக்கப்பட்டது தவிர, இவ்வுணவு விடுதியின் வரவு செலவுக் கணக்கைப் பார்க்க தனியாக ஒரு கணக்கு அலுவலர் அரசால் நியமிக்கப்பட்டுள்ளார்.

** புதிய கட்டடங்கள் நிர்மாணம்:*

இப்பயிற்சி நிலையத்தினை நாட்டின் ஒரு முன்னோடி நிலையமாக உயர்த்தும் நோக்குடன் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி–1) துறை, அரசாணை (நிலை) எண் 163, நாள் 22.11.2012–இன் மூலம் இப்பயிற்சி நிலையத்தின் பயிற்சிக்கான உள் கட்டமைப்பை வலுப்படுத்தவும், இந்நிலையத்தை நவீனப்படுத்தவும் அரசு ரூ.3,623.34 இலட்சம் வழங்கி ஆணையிட்டுள்ளது. இவ்வரசாணையின்படி பின்வரும் உள் கட்டமைப்பு, இதர பணிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | புதிய உள் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் (புதிய கட்டடங்கள்) | 2,853.00 |
| 2. | தற்போதுள்ள உள்கட்டமைப்புகளை மேம்படுத்துதல் / வலுப்படுத்துதல் | 205.40 |
| 3. | வினைத்திறன் மிக்க வகுப்பறைகள் அமைத்தல் | 42.85 |

| | | |
|---|---|---|
| **4.** | பயிற்சி நிலைய வளாகத்தில் பசுமை விரிவாக்கம் | **72.97** |
| **5.** | நிலைய வளாகம் முழுவதும் பிரதான, இணைப்பு சாலைகள் அமைத்தல் | **178.75** |
| **6.** | முழுமையான தர மேலாண்மை | **111.07** |
| **7.** | பொதுப்பணித் துறையின் தேவைப்படி ஒட்டு மொத்த ஒதுக்கீடு | **159.30** |
| | **மொத்தம்** | **3,623.34** |

புதிய கட்டமைப்பு வசதிகளின் கீழ் விருந்தினர் இல்லம், புதிய நிருவாக வளாகம், கூடுதல் வகுப்பறைகள், நவீன நூலகம், உள்–விளையாட்டரங்கங்கள், காணொளி வசதியுடன் கூடிய கலையரங்கம், கூடுதல் விடுதிக் கட்டடங்கள், நவீன சமையலகம், முதல்வர் குடியிருப்பு, விரிவுரையாளர்கள், இதர அலுவலர்களுக்கான ஒருங்கிணைந்த குடியிருப்பு வளாகங்கள், சுற்றுச் சுவர் ஆகியன கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அரசாணை நிலை எண் **130**, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் **(**பயிற்சி**–1)** துறை, நாள்: **10.12.2014** மூலம் திருத்தி வழங்கப்பட்டுள்ள

நிருவாக ஒப்பளிப்பின்படி பொதுப்பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டுமானப் பணிகளுக்கு ரூ.220.84 இலட்சம் கூடுதலாக நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு இத்திட்டத்திற்கென அரசு மொத்தம் ரூ.3,844.18 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

**6. ஆய்வுப் பிரிவு**

அரசு அலுவலகங்களில் காலமுறையிலான ஆய்வு செய்யும் திட்டமானது நிருவாகத்தை செம்மைப்படுத்தவும், திறமையை மேம்படுத்தவும் மற்றும் நீண்டகால தாமதங்களைத் தவிர்க்கும் பொருட்டும் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டது. முதுநிலை அலுவலர்கள் மூலம் துறைத் தலைமை அலுவலகங்கள், மாநகராட்சி அலுவலகங்கள், தலைமைச் செயலகத் துறைகள் ஆகியவற்றை ஆய்வு மேற்கொள்ளும் திட்டம் 1959–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

மூன்று பிரிவுகளைக் கொண்ட ஆய்வுப் பிரிவுகள் தலைமைச் செயலகத்தில் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறையின்

அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. அரசு துணைச் செயலாளர் நிலையிலுள்ள அலுவலர்கள் கட்டுப்பாட்டில் ஆய்வு–1, ஆய்வு–2 பிரிவுகளும் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலுள்ள அலுவலரின் கட்டுப்பாட்டில் ஆய்வு–3 பிரிவும் செயல்படுகின்றன.

இம்மூன்று ஆய்வு பிரிவுகளும் துறைத் தலைமை அலுவலகங்கள், மாநகராட்சி அலுவலகங்கள், தலைமைச் செயலகத் துறைகள் உள்ளிட்ட 36 துறைத் தலைமை அலுவலகங்களில், ஒவ்வோர் ஆண்டிலும் தயாரிக்கப்படும் ஆய்வுத் திட்ட நிகழ்ச்சி நிரல்களின்படி ஆய்வுகள் மேற்கொள்கின்றன. ஆய்வுக்குப் பின்னர் சம்பந்தப்பட்ட துறைத் தலைமை அலுவலகங்களுக்கு முதனிலை ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. முதனிலை ஆய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்படும் குறைபாடுகளைக் களைந்து குறைகளைவு அறிக்கையை அத்துறைகள் அரசுக்கு அனுப்புகின்றன. அரசினால் நியமிக்கப்படும் மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களால் இறுதி

ஆய்வு செய்யப்படுகின்றன. இறுதி ஆய்வு அலுவலர்களால் அளிக்கப்படும் ஆய்வு மற்றும் பொதுக்குறிப்புகள் சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு தீர்வு காண்பதற்காக அனுப்பப்படுகின்றன.

மாவட்ட நிருவாகத்தை முன்னேற்றும் வகையில் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் மூன்று ஆய்வு பிரிவுகளால், 11 (பதினொன்று) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களுடன் இணைந்து மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கு இரண்டு நாட்களுக்கான ஒழுங்கு நடவடிக்கை குறித்த ‘‘முன்னோடி பயிற்சி’’ மற்றும் கண்காணிப்பாளர், மேலாளர் நிலையில் உள்ள பணியாளர்களுக்கு அலுவலக நடைமுறைகள் குறித்த மூன்று நாட்களுக்கான ‘‘குறுகியகால பயிற்சி’’ நடத்தப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி வகுப்புகள் ஒவ்வோராண்டும் மாவட்ட ஆட்சியரகங்களில் நடத்தப்படுகின்றன. 2014–2015–ஆம் ஆண்டு மார்ச் 2015 வரை 32 முன்னோடி பயிற்சிகளும் 32 குறுகிய கால பயிற்சிகளும் நடத்தப்பட்டுள்ளன.

*** மாவட்ட ஆய்வுக் குழுக்கள்**

1975–ஆம் ஆண்டில், மாவட்டங்களில் உள்ள அலுவலகங்களின் நிருவாகத் திறமையை மேம்படுத்துவதற்கும், சார்நிலை அலுவலகங்களின் பணியை நெறிப்படுத்துவதற்கும் மாவட்ட ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டன. பதினோரு மாவட்ட ஆய்வுக்குழுக்கள் தற்போது உள்ளன. இக்குழுக்கள் துணை ஆட்சியர் நிலையிலான ஆய்வுக்குழு அலுவலர்களின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

மாவட்ட ஆய்வுக்குழுக்கள் மாவட்ட அளவிலான அலுவலகங்களில் விரிவான ஆண்டு ஆய்வு மற்றும் திடீர் ஆய்வுகளை மேற்கொள்கின்றன. ஒவ்வொரு ஆண்டிலும் மாவட்ட அலுவலகங்களில் 12 விரிவான ஆண்டு ஆய்வுகளையும், 240 திடீர் ஆய்வுகளையும் மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. காலமுறையில் மாவட்ட ஆய்வுக்குழுக்களின் மாதாந்திர பணி திறனாய்வு செய்யப்பட்டு அவற்றின் மீதான குறிப்புரை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கும், அவற்றின் நகல் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களுக்கும்

அனுப்பப்படுகின்றன. மாவட்ட ஆய்வுக் குழுக்களானது மாவட்ட விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்பு பிரிவுகள் மேற்கொள்ளும் திடீர் ஆய்வுகளுக்கு உறுதுணையாக செயல்படுகின்றன. 2015–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முடிய மாவட்ட ஆட்சித் தலைவர்களின் முன்னிலையில் விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்புக் குழு அலுவலர்களுடன் இணைந்து 91 ஒருங்கிணைந்த கூட்டங்கள் மாவட்ட ஆய்வுக்குழுக்களால் நடத்தப்பட்டுள்ளன.

*** புத்தாக்கப் பயிற்சி**

அனைத்து மாவட்டங்களில் உள்ள இளநிலை உதவியாளர்கள் / உதவியாளர்களுக்கு ஐந்து நாட்கள் கொண்ட புத்தாக்கப் பயிற்சியினை ஆண்டுதோறும் ரூ.10.40 இலட்சம் செலவில் வழங்கிட 09.01.2014 நாளிட்ட பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (ஆய்வு–2) துறையின் அரசாணை (நிலை) எண் 3–இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அனைத்து மாவட்டத் தலைமையிடங்களில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களால் இப்புத்தாக்கப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**7. அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு**

அரசின் நடைமுறையிலுள்ள செயல்பாடுகளை மாற்றி அமைப்பதன் மூலம் பணியாளர்களின் எண்ணிக்கையை ஒழுங்குபடுத்துவதற்கு, அரசு 01.08.1970 அன்று, நிதித்துறையில், அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு ஒன்றை உருவாக்கியது. அதன் பிறகு அரசு, மைய அரசின் நிலையை பின்பற்ற வேண்டிய அவசியத்தை உணர்ந்து, 01.10.1979 அன்று அமைப்பு மற்றும் செயல்முறைக் குழுவை நிதித் துறையிலிருந்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறைக்கு மாற்றியது.

2. அரசின் பல்வேறு துறைகளிலுள்ள வழிமுறைகளையும், நடைமுறைகளையும் எளிதாக்கவும், பணியாளர்களின் தேவையைக் கணித்து அறியவும், அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கவும், சிறந்த பதிவேடுகள் மேலாண்மையைப் பராமரிக்கவும், சிக்கன நடவடிக்கை மற்றும் செயல்திறனை மேம்படுத்தவும், தேவையான நுண்ணாய்வை மேற்கொள்ளவேண்டி,

அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு உருவாக்கப்பட்டது.

**3.** அமைப்பு மற்றும் செயல்முறைக் குழுவானது, அரசு துறைகளில் நுண்ணாய்வை மேற்கொள்வதற்காக, அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு வல்லுநர் தலைமையில், ஒரு குழுவுக்கு இரண்டு ஆராய்ச்சி அலுவலர்கள் வீதம் இரண்டு நிருவாகக் குழுக்களையும், வரவு–செலவு கணக்கு உட்பட அக்குழுக்களுக்கான அலுவலக நடைமுறைகளை மேற்கொள்ள, அரசு இணைச் செயலாளர் அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு தலைமையில், ஒரு ஆராய்ச்சி அலுவலர், ஒரு உதவி பிரிவு அலுவலரைக் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்றையும் உள்ளடக்கியது. அரசு இணைச் செயலாளர் (அமைப்பு மற்றும் செயல்முறை) அவர்கள், இரண்டு நிருவாகக் குழுக்கள் மற்றும் கண்காணிப்புக்குழுவுக்கு ஒருங்கிணைப்பாளராகவும் செயல்படுகிறார்.

**4.** அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு அமைக்கப்பட்டது முதல் இதுவரை **233**

நுண்ணாய்வுகளை, அக்குழு மேற்கொண்டுள்ளது. சமீபத்தில், அமைப்பு மற்றும் செயல்முறை குழு திருச்சியில் உள்ள மாநில அருந்தக மேலாண்மை மற்றும் உணவளிக்கும் தொழில்நுட்ப நிறுவனத்தில் நுண்ணாய்வை நிறைவு செய்தது. தற்போது, சென்னையில் உள்ள கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அலுவலகத்தில், அமைப்பு மற்றும் செயல்முறை நுண்ணாய்வு நடைபெற்றுவருகிறது.

**எஸ். பி. வேலுமணி,**
**நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி,**
**சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்**
**சிறைச்சாலைகள் துறை அமைச்சர்**